**வலல்லாவிட்ட பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஆகஸ்ட் 15 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 16 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வலல்லாவிட்ட பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டின் போது கெப் வண்டியை பழுதுபார்த்ததற்காக மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 50,000 கடன்தொகை பதிவழிக்கப்பட்டு முத்திரைக் கட்டண வருமானத்திலிருந்து அறவிட்டு கணக்கீடு செய்வதற்காக மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்த வேண்டிய கடன் கணக்கு ரூபா 50,000 தொகை வரவு வைக்கப்பட்டு பெறவேண்டிய முத்திரைக் கட்டணக் கணக்கு ரூபா 50,000 செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், திரண்ட நிதியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 17,205 பெறுமதியான பெக்ஸ் இயந்திரம் மீண்டெழும் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) இத்தபான உப அலுவலகத்தில் வருமானம் சேகரிப்பதற்காக மீளாய்வாண்டின் போது வங்கியினால் அறவிடப்பட்டிருந்த தரகுப்பணம் ரூபா 50,854 மற்றும் கடந்த ஆண்டிற்காக அறவிடப்பட்டிருந்த ரூபா 581,997 என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 809,505 தொகையான முத்திரைக் கட்டண வருமானம் திரண்ட நிதிய கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(அ) 09 கணக்கு விடயங்களுக்கான கணக்கின் பிரகாரம் மீதி ரூபா 38,635,942 ஆக இருந்த போதிலும், அவற்றிற்குரிய பட்டோலைகளின் பிரகாரம் மீதி ரூபா 38,107,506 ஆனமையால் ரூபா 528,436 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட முற்பணப் பட்டோலையில் குறிப்பிடப்படாத 2009 முதல் 2014 வரையான ஆண்டுகளுக்குரிய ரூபா 344,925 தொகை தீர்க்கப்படாத முற்பணமாக முற்பணம் பதிவேட்டில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

விரிவானதொரு பட்டோலை சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 116,206,059 தொகையான 04 கணக்கு மீதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்

பின்வரும் சட்டங்கள். விதிகள், பிரமாணங்கள் மற்றும் ஏற்பாடுகளுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை**

(i) நிதிப்பிரமாணம் 371(அ) இன் பிரகாரம் எந்தவொரு செயற்பாட்டிற்காகவும் வழங்கப்படுகின்ற முற்பணம் அந்த செயற்பாடு முடிவடைந்ததும் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2008 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட ரூபா 115,000 தொகையான முற்பணம் கணக்காய்வுத் திகதியான 2016 சனவரி 26 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த இரண்டு நடைமுறைக் கணக்குகளுக்குரிய கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய ரூபா 275,404 தொகையான 57 காசோலைகள் தொடர்பாக 2016 ஏப்ரல் மாதம் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) நிதிப்பிரமாணம் 1645 இன் பிரகாரம் வாகன சம்பவத்திரட்டுப் புத்தகம் பேணப்பட வேண்டியிருந்த போதிலும், சபை எந்தவொரு வாகனம் தொடர்பாகவும் சம்பவத்திரட்டுப் புத்தகம் எழுதியிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,058,430 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,288,035 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

---

**2.2.1 நிலுவை வருமானம்**

---

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 2,732,630 கூட்டுத்தொகையான நிலுவை வருமானம் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 ஆதனவரி**

---

2015 சனவரி 01 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதியான ரூபா 1,852,765 இல் மீளாய்வாண்டின் போது ரூபா 745,276 தொகையொன்று கிடைத்திருந்ததுடன் நிலுவைப் பணத்தை அறவீடு செய்யும் செயல்முன்னேற்றம் 40.23 சதவீதமாக இருந்தது. மீளாய்வாண்டின் போது பற்றுச்சீட்டிடபட்ட ஆதனவரி வருமானம் ரூபா 1,962,122 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 1,107,252 தொகையொன்று அதாவது 56.43 சதவீதம் ஆண்டின் போது அறவிடப்பட்டிருந்தது.

**2.2.3 ஏக்கர் வரி**

---

2015 ஆம் ஆண்டிற்கான ஏக்கர் வரி பற்றுச்சீட்டிடல் ரூபா 14,822 ஆக இருந்ததுடன் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அதில் ரூபா 4,335 தொகை மாத்திரம் அதாவது 29 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 70,268 ஆக இருந்ததுடன் 2015 திசெம்பர் 31 வரையில் அதில் ரூபா 5,959 தொகை அதாவது 8 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

**2.2.4 கைத்தொழில் வரி**

---

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கைத்தொழில் வரி மீதி ரூபா 119,210 ஆக இருந்ததுடன் 2015 திசெம்பர் 31 வரையில் அதில் ரூபா 35,000 அதாவது 29 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

**2.2.5 இறைச்சிக் கடை வாடகை**

---

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை இறைச்சிக் கடை வாடகை மீதி ரூபா 56,636 ஆக இருந்ததுடன் 2015 ஆம் ஆண்டில் அதில் எத்தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 விளம்பர அறிவித்தல் கட்டணம்**

---

பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டுள்ள பெயர்ப்பலகை/ விளம்பர அறிவித்தல்களுக்காக கட்டணம் அறவிடுவதற்காக உப விதிகள் விதிக்கப்படாமையினால் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் உள்ள பெயர்ப்பலகை/ அறிவித்தல் பதாதைகளிலிருந்து கட்டணத்தை அறவிட முடியாதிருந்தது.

**2.2.7 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

---

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினர்களிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 9,878,212 தொகையொன்று கீழே குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் கிடைக்க வேண்டியிருந்தது.

| | | |
|---|---|---|
| | | **ரூபா** |
| | நீதிமன்றத் தண்டப்பணம் | 7,409,907 |
| | முத்திரைக் கட்டணம் | 2,468,305 |

**2.2.8 காணி விற்பனைக் கட்டணம்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154(1) இன் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் காணி ஏல விற்பனையின் போது ஏலமிடப்படுகின்ற காணிகளின் விற்பனை விலையில் 1 சதவீத வருமானமொன்று சபையினால் பெறப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்யாது சபையின் வருமானக் கட்டுப்பாட்டாளரால் தீர்மானிக்கப்பட்ட அண்ணளவான மதிப்பீட்டில் 1 சதவீத தொகையான ரூபா 244,357 தொகை 02 காணி விற்பனைகளிலிருந்து 2014 ஆம் ஆண்டின் போது பெறப்பட்டிருந்ததுடன் அண்ணளவான மதிப்பீட்டிற்கும் சந்தை விற்பனைப் பெறுமதிக்கும் இடையேயான வேறுபாட்டை சீராக்கி மிகுதிப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

(அ) வாகன பழுதுபார்த்தல் பதிவேட்டின் பிரகாரம், பல வருடகாலத்திலிருந்து பழுதுபார்க்கப்படாமலும் ஓட்டத்தில் ஈடுபடாததுமான 02 ஜேசிபீ இயந்திரங்கள், 02 கெப் வண்டிகள், 04 உழவு இயந்திரங்கள், 03 கை உழவு இயந்திரங்கள் டிபர் வானமொன்று, முச்சக்கர வண்டியொன்று என்பன சபை வளவில் தரித்து வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபையில் சேவையாற்றுகின்ற தற்காலிக மற்றும் அமைய ஊழியர்களுக்காகச் செலுத்தப்படுகின்ற ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான தவணைப்பணம் நீண்ட காலமாக குறித்த திகதியில் செலுத்தாமையின் காரணமாக ரூபா 129,868 தொகையொன்றை அந்த நிதியத்திற்கு மிகைக்கட்டணமாகச் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்